RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1946

OPEN ACCESS

# வாழ்வியல் அறம் பகரும் புறநானூறு

கி. தேன்மொழி [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, கலைஞர் அரசு கலைக் கல்லூரி, குளித்தலை (ஐயர் மலை), கரூர்-639120, தமிழ்நாடு, இந்தியா

# The Virtue of Life as shared in Purananooru

**K. Thenmozhi** [a, *]

[a] Department of Tamil, Kalaignar Government Arts College, Kulithalai, (Ayyar Malai), Karur-639120, Tamil Nadu, India

* Corresponding Author: thenmozhiphdbdu@gmail.com

Received: 30-08-2022
Revised: 15-10-2022
Accepted: 28-10-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

Of the creatures in the world, man is the only one who thinks about what benefits him from what he does and does not think about the harm that will befall others. Literature was created by scholars to refute such an idea. In these exceptions, the Akam and Puram are divided and give us the golden life of the Sangam age. The Sangam poets who created these poems have shown their own lives as a life of noble pride. As a result of this life, in their works, they have highlighted in the literature the values of life such as effortfulness, helpfulness, selflessness, and love for life. Moreover, the Sangam literature is also a source of evidence and message for those who wish to know about the ancient Tamil civilization, linguistic excellence, cultural culture, etc. The Sangam literature is classified into Pathuppaattu and Ettutthokai. Literature, which describes the way human beings lived, can also show the way in which they should live. What is recorded in the Purananuru is not merely battlefield news. In Puram (external) thinking, the root of ethical thinking can be found to be concentrated. On the surface, which is regarded as generic, the ideas of life form the basis of morality. That is to say, society is a union of individuals. The virtues performed by individuals create the betterment of society. The morals practiced by the people in society are the morals of the society. Individual morality can be found in the Akam (family) sense and social morality in the Puram (external) sense. The ancient Tamils were heroic and virtuous. On the whole, it can be seen that purananuru is a treasure trove of history that highlights the heroic lives of the Sangam Tamils. This article highlights the ways of life of the heroic people in the Purananooru, such as war messages, life values, royal traditions, etc.

**Keywords:** Purananooru, Virtue of Life, Literature, Sangam Literature

## முன்னுரை

உலகில் உள்ள உயிரினங்களில் மனிதன் மட்டுமே தான் செய்யும் செயல்களினால் தனக்கு என்ன லாபம் என்பதை யோசித்தும் பிறருக்கு நேரிடும் தீமை என்ன என்பதை யோசிக்காமலும் செயல்படும் சிந்தனை படைத்தவனாக உள்ளான். அத்தகைய எண்ணத்தைக் இடித்துரைக்க சான்றோர்களால் படைக்கப்பட்டதுதான் இலக்கியங்கள். இவ்விலக்கியங்களில் அகம், புறம் என பாகுபடுத்தப்பட்டு சங்க கால பொற்கால வாழ்வியலை நமக்குப் பகர்கின்றது. இவ்விலக்கியங்களைப் படைத்த சங்கப் புலவர்கள் தங்கள் வாழ்க்கையையே விழுமியமிக்க பெருமித வாழ்வாக வாழ்ந்து காட்டியுள்ளனர். இவ்வாறு வாழ்ந்ததன் விளைவாக தங்கள் படைப்புகளில் முயற்சியுடைமை, உதவும்

மனப்பான்மை, தன்னலமின்மை, உயிர்களை நேசித்தல் போன்ற வாழ்வியல் விழுமியங்களை இலக்கியங்களில் எடுத்தியம்பியுள்ளனர். மேலும், பண்டைய தமிழ் நாகரீகம், மொழிச் சிறப்பு பண்பாட்டு கலாச்சாரம் முதலானவற்றை அறிய விரும்புவோர்க்குச் சான்றாதரமாக, செய்தி ஊற்றாக விளங்குவது சங்க இலக்கியம். சங்க இலக்கியங்கள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான புறநானூற்றில் வரும் வீரர்களின் வாழ்க்கை முறைகளாகப் போர்ச் செய்திகள், வாழ்க்கை விழுமியங்கள், அரசமரபு போன்றவற்றின் அறமுறைமையை இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

## மனித சமுதாயமும் அறமும்

மனித சமுதாயத்தில் வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் அரசு என்பது இருந்ததில்லை. ஆங்காங்குப் பழங்குடிக் குழுக்களும், குலஅமைப்புகளும் இருந்து மக்கள் கூட்டங்களை நெறிப்படுத்தி வழிகாட்டின. அவை சமுதாயத்திற்கு வழிகாட்டி நெறிப்படுத்தத் தேவையான சட்டதிட்ட விதிகளையும், உறவுகளையும், ஒழுகலாறுகளையும் பண்புகளையும் படைத்துக்கொண்டன. அரசு தோன்றிய பிறகு அவை அறநெறிகளாகவும், பழக்கவழக்கங்களாகவும் காலத்திற்கேற்ப மாறி புதுபொலிவுடன் இன்றளவும் நின்று நிலவி பெருமை சேர்த்து வருகின்றன. உழைப்பு, நேர்மை, அறம், வாய்மை, உண்மை, இன்னா செய்யாமை, ஒப்புரவு போன்ற பண்புகள் எல்லாம் இவ்வாறு உருபெற்றுத் தொடர்வனவே.

புறநானூறு பொங்கிவரும் வீரத்தின் கனலாறு என்றால் அது மிகையாகாது. செந்தமிழரின் வரலாறு. செங்கழல் அணிந்த வேந்தர்களின் சீற்றம் குருதியாக, வெகுளியால் வஞ்சினமிக்க வீரர்கள் புகுந்து விளையாடிய போர்க்களப்பாடல்கள் புறநானூற்றில் பதிவாகியுள்ளன. ஆழ்ந்த, விரிவடைந்த, அகன்ற அறிவுடன் கூடிய செறிவு மிக்க அறப்பாடல்களும் வாழ்க்கைக்கு விதியாகியுள்ளன. மொத்தத்தில் பண்டைத் தமிழர் வரலாற்று ஆவணம் இந்நூல் ஆகும். இத்தகைய புறநானூறு கிடைத்திராவிடில் பண்டைத்தமிழர்தம் வீரப்பண்பாட்டை அறிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்திருக்காது. போர் நாகரீகத்தைப் புரிந்து கொள்ளவும் வாய்ப்பு கிடைத்திருக்காது.

## மூவேந்தர்களும் அறமும்

மூவேந்தரைப் பற்றிய பாடல்களில் சேரர், பாண்டியர், சோழர் என்று வரிசை மாற்றிய முறையில் முதல் பதினெட்டுப்பாடல்கள் உள்ளன. புவியியல் முறைப்படி இம்முறைவைப்பே சரியானதாகும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். அரசர்க்கும், பிறர்க்கும் அறநிலையை எடுத்துக்கூறும் பாடல்களும், பாணாற்றுப்படை, விறலியாற்றுப்படை, புலவராற்றுப்படைப் போன்ற ஆற்றுப்படைச் செய்யுள்களும் இடையிடையே அமைந்து காணப்படுகிறன. பெரும்பாலான இடங்களில் திணை, துறை முதலிய அமைப்பில் பாடல்களுக்கிடையேத் தொடர்பு காணப்படுகிறது. மக்கட்சமுதாயம் போர்ப்பற்றியச் சிந்தனையில் மூழ்கியிருந்தக் காலம் தொன்மையான காலம். அடிப்படை வாழ்விற்குப் ‘போரே ஆணிவேர்’ என்று மனிதன் எண்ணியிருந்தக் காலமாகக் கருதப்படுகிறது. பண்டைக்கால வாழ்விற்குப் போர் அடித்தளமாக அமைந்திருப்பதை வரலாறும், இலக்கியமும் எடுத்துக்காட்டுகின்றன.

"ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்

புதுவதன்று இவ்வுலகத் தியற்கை

இன்றின் ஊங்கோ கேளலம் திரளரை

மன்ற வேம்பின் மாச்சினை ஒண்தளிர்

நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மிடைந்து

செறியத் தொடுத்த தேம்பாய் கண்ணி

ஒலியல் மாலையொடு பொலியச் சூடிப்

பாடின் தெண்கிணை கறங்கக் காண்டக

நாடுகெழு"

என்ற பாடலடிகள் தொன்று தொட்டு மனிதர் முரண்பட வாழ்ந்த நிலை தொடர்ச்சியானது என்பதை உணர்த்துவதைக் காணலாம். போருக்காக மக்களிடையே நிலவி வந்த நோக்கம் தலைமைப் பற்றியதாகவே இருந்தது. செல்வம், செல்வாக்கு, புகழ், அறம், அதிகாரம், செருக்கு, சினம் முதலிய அனைத்து நிலைகளிலுமே போர்ப்பற்றிய எண்ணம் மக்களிடையே ஊடுருவியிருந்தது. போரில் ஏற்படும் விளைவுகள் அவ்வக்காலங்களில் மாற்றங்களை ஏற்படுத்தியிருந்ததையும் சங்கப் பாடல்களிலிருந்து அறியமுடிகிறது (Avvai Duraisamy pillai, 2010).

## போரின் ஆரம்பகட்ட நிலை

ஆநிரைகளைக் கவர்தலும், மீட்டலுமே போர் நாகரீகத்தின் தொடக்க நிலைகளாகும். தேவையான செல்வத்தை ஈட்டி அதனைத் தக்க வைத்துக் கொள்ளவும் தேவையான இடத்திற்கு மேலும் தன் பரப்பை விரிவுபடுத்திக்கொள்ளவும், இனக்குழுத்தலைவன் தன் கூட்டத்திற்கானப் போதிய இடமும் வளமும் தேவை என்பதன் காரணம் கருதியும் போர்ப்புரியத் தொடங்கினான்.

"வையம் காவலர், வழிமொழிந்து ஒழுகப்

போகம் வேண்டிப் பொதுச்சொல் பொறாஅது

இடம் சிறிது என்னும் ஊக்கம் துரப்ப

ஒடுங்கா உள்ளத்து, ஓம்பா ஈகைச்"

என்னும் புறநானூற்றுப் பாடலடிகள், சேரமான் கடுங்கோ வாழியாதன் என்னும் மன்னன் தன் குடிமக்களின் வசதிக்காக, பிறநாட்டின் இடங்களைக் கவர முற்பட்டமையைக் கூறுவதாக அமைந்துள்ளமையைக் காணமுடிகிறது (Avvai Duraisamy pillai, 2010).

தன் ஆணைக்கு மாற்றார் அடிபணிய வேண்டும். தன் செங்கோலும் வெண்குடையும் போற்றப்பட வேண்டும். இவற்றிற்குரிய மதிப்பினை பிறர் தருதல் வேண்டும் முதலிய எண்ணங்கள் மன்னன் மனதில் ஓங்கியிருந்துள்ளது. அனைத்தும் தன் ஆட்சிக்கு உட்படவேண்டும் என்ற உணர்வும் இதிலடங்கும். நிரை கவர்தலிலிருந்து, நிலம் கவரும் நோக்கிற்கு மாறிய காலகட்டம் என்பதை அறியமுடிகிறது. "போர் இயல்பானது, பொதுவாக மனித குலத்திற்கு ஒத்தது. அது தன்னைத்தானே விளைவித்துக் கொள்ளும் என்றெல்லாம் சமூக இயலாரும், மானுட இயலாறும் கருதுவர்"! என்று குறிப்பிடுகின்றார் (Chidambaranar Samy, 2008).

## போர் வீரர்கள்

வீரர்கள் என்றும், மள்ளர்கள் என்றும் அழைக்கப்படும் இவர்கள் சான்றோன் என்ற சொல்லாலும் சங்க இலக்கியத்தில் குறிக்கப்பட்டுள்ளனர்.

"தேர்தர வந்த சான்றோர் எல்லாம்

தோல் கண் மறைப்ப, ஒருங்கு மாய்ந்தனரே" (Avvai Duraisamy pillai, 2010)

எனவரும் பாடலடிகளில் பாங்கினை அறிய முடிகிறது.

இதனையே பதிற்றுப்பத்து

"நோய்புரித் தடக்கைச் சான்றோர்"

என பதிற்றுப்பத்து இங்கே குறிப்பிட்டுள்ளது உற்று நோக்கத்தக்கது (Avvai Duraisamy pillai, 2010). புறப்பாடல்களின் மூலம் இளைஞருக்குச் சிறுவயது முதலே சினவுணர்ச்சியும் மறப்பண்பும்

இருந்தமையை அறியமுடிகின்றது. போரிலே வெற்றிபெறும் வீரர்க்குப் பரிசும், நிலமும் தருவது பற்றிய சிந்தனையைப் புறப்பாடல்கள் சில குறிப்பிடுகின்றன. பிற நாட்டைக் கொள்ளையிடுதல் போன்ற நிகழ்வுகளோடு மன்னனுடன் வீரர்கள் பங்கேற்றனர். பகைவரது வயலில் புகுந்துக் கொள்ளையிட்டும், பகைவர் நாட்டை எரியூட்டியும் அழித்தனர். இதனால் வீரர்களுக்கு நிலம் கிடைத்தது. மன்னன் நிலம் தந்தபோது வளமிக்க மருதநிலத்தைக் கேட்டுப்பெற்றனர். வீரரின் உரிமை இங்கு நிலைநாட்டப் பெறுவதை இதன் மூலம் அறியலாம். போர் நடப்பதற்கான சிலச் சூழ்நிலைகளையும் ஆசிரியர்கள் வரையறுத்துள்ளனர்.

1. சாதிமுறைச் சமுதாய உணர்ச்சி, 2. அமைதி மனத்திற்கு வறட்சி உண்டாக்குதல், 3. வீரமும் துணிச்சலும், 4. மனிதற்கு இயற்கையான போரிடும் தன்மை, 5. தற்காப்பு நியமம், 6. வெகுளியும், பொறாமையும், 7. மீதூரும் உள்ளக்கிளர்ச்சி" போன்ற காரணங்களாக ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளார்கள். இதன் அடிப்படையில்தான் போர் ஆரம்பமாகிறது. இப்படி தனிமனிதனின் மேலோங்கிய எண்ணங்களினால் போர்க்களங்கள் உண்டாகின்றன.

## ஆட்சியில் ஆளுமை

ஆட்சியில் மன்னரிடையே வீரம், மானம் பெரிதாகக் கருதப்பட்டது. சேரமான கணைக்கால் இரும்பொறை செங்கணானால் சிறைபிடிக்கப்பட்டப்பின் காவலரிடம் நீர்கேட்டுக் காலந்தாழ்த்தி நீர் கொண்டு வந்ததற்கு, இரந்து பெறவேண்டிய மனமின்றி எண்ணி உயிர் துறந்தான். இதனை தொண்டைமான் இளந்திரையனின் பாடலில்,

"கால்பார் கோத்து ஞாலத்து இயக்கும்

காவற் சாகா டுகைப்போன் மாணின்

ஊறின் றாகி யாறினுது படுமே"

எனவரும் பாடலில் ஆட்சியென்னும் சக்கரத்தை செலுத்துவோன் மாட்சிமை பெற்றிருத்தல் வேண்டும். இல்லாவிட்டால் பகை என்னும் சேற்றில் அழுந்தி அழிய நேரிடும் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது. எனவே சான்றோர் வகுத்த நெறிப்படி ஆட்சி அமைதல் வேண்டும் என்பதை உணர்த்துகிறது (Avvai Duraisamy pillai, 2010).

போர்களத்துப் பொருவதும், வெற்றி கொள்வதும் மன்னர்க்குப் பொழுது போக்கு. அதே சமயம் தாம் செய்த போரின் விளைவுகளை, அழிவுகளை அவலங்களை எண்ணி அமைதியுற்றனரா என்னும் செய்திப் புறப்பாட்டில் காண்பது அரிதாக உள்ளது. போருக்கு ஊக்கியப் புலவர்கள் சிலர், மன்னனின் போர் வெற்றியைத் தவிர்த்து வாழ்க்கையில் இன்பம் காணுமாறு தூண்டியுள்ளதையும், மழைப் பொய்த்தாலும், நாடு வறுமையுற்றாலும் மக்களின் இயற்கையான செயல்வினைகள் பாழ்பட்டு முறைபிறழ்ந்தாலும் இவ்வுலகம் மன்னரைப் பழிக்கும் என்பதை சிலப்பதிகாரத்தில் சேரன் செங்குட்டுவனின் சிறப்பினைப் பற்றி இளங்கோவடிகள் கூறுவது இங்கே நினைவுக்கூறத்தக்கது.

"மழைவளங் கரப்பின் வான்பேரச்சம்

பிழையுயி ரெய்தின் பெரும்பே ரச்சம்

குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி

மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்

துன்ப மல்லது தொழுதக வில்லெனத்

துன்னிய துன்பம் துணிந்துவந் துரைத்த"

எனவரும் பாடலடிகள் மன்னனுடைய ஆட்சியின் அருமைபற்றி விளக்கும் விதமாக அமைந்துள்ளது (Venkatasamy Nattar, 1994).

## பாசறை அறம்

ஓர் அரசன் போருக்குச் செல்லும்போது எதிரி நாட்டுக்கு அருகில் பாசறை அமைத்து அப்பாசறையில் இரவில் தங்கி பகலில் போரிடுவான் என்பது இங்கு குறிப்படத்தக்கது. பகலில் போரிட்டு இரவில் போரிடாமையைப் பண்டைத் தமிழர் மரபினர் போர் அறமாகக் கொண்டிருந்தனர். புலவர் பெருங்குன்றூர்கிழார் படைகளின் இரவு காலச் செயலினைக் குறிக்கும் பாடல்வழி, பகற்காலப் போரின் கடுமையை உய்த்துணர வைக்கின்றார். நெடுநல்வாடை இரவு நேரத்தில் பாசறைகளில் காயமுற்ற வீரர்களுக்கு ஆறுதல் சொல்லும் அரசரின் கடமை உணர்வையும், செயல்களையும் எடுத்தியம்புகின்றது. நெடுஞ்செழியன் வாடைக்காற்றுடன் மழைத்துளியும் வீசுகின்ற இரவு நேரத்திலும், படைத்தலைவன் உதவியுடன் சென்றுக் காயமுற்ற வீரர்களைக் கண்டு ஆறுதல் கூறினான் என்பதை,

"புடைவீழ் அந்துகில் இடவயின் தழீஇ

வாள்தோள் கோத்த வன்கட் காளை

சுவல்மிசை யமைத்த கையன் முகனமர்ந்து

நூல்கால் யாத்த மாலை வெண்குடை

தவ்வென் றசைஇத், தாதுளி மறைப்ப

நள்ளென; யாமத்தும் பள்ளி கொள்ளான்.

சிலரொடு திரிதரும் வேந்தன்,

பலரொடு முரணிய பாசறைத் தொழிலே"

என்னும் அடிகளில் காணலாம் (Kathir Murugu, 2003).

அக்கால மன்னர்களிடத்தில் பகை அரசனிடம் போர்ச்செய்து நாட்டைக் கைப்பற்ற வேண்டும் என்ற உணர்வு இருப்பினும், அவர்களுக்குள்ளே சில விதிமுறைகளுக்கு உட்பட்டே போர் நடந்தேறியது. இதனால் பகலில் போரிடுவதும், இரவில் போரை நிறுத்துவதும் வழக்கமாயிருந்துள்ளன என்பது புலனாகிறது என்பதை

"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்,

பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்

தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்

பொன்போல் புதல்வர்ப் பெறாஇ தீரும்

எம் அம்பு கடிவிடுதும் நும் அரண் சேர்மின்' என

அறத்துஆறு நுவலும் பூட்கை"

என்னும் பாடலடிகளில் போர் அறத்தைக் காணலாம் (Avvai Duraisamy pillai, 2010). மேலும், "அக்காலத்தில் தகுந்த காரணமின்றிப் பண்டைத் தமிழ் மன்னர்கள் போரிலே தலையிடமாட்டார்கள். போரால் பொதுமக்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படுத்துவதில்லை. படைகளும் பண்டங்களும்தான் போர்க்களத்திலே பாழாகும். பொதுமக்களுக்கு அறிவித்தப் பின்னரே போரினைத் தொடங்குவார்கள்" கூறுவதிலிருந்து அறியலாம் (Chidambaranar Samy, 2008).

## புலவர் பெருமை

மன்னன் பாசறையில் தங்கியிருந்த காலத்தில்கூட புலமைக்குப் பெருமதிப்பு கொடுத்தான். எனவே சங்ககால புலவர்களின் நிலை செம்மையுடையதாக இருந்தது. மன்னர்கள் புலவர்களை நேசித்தனர். செல்வம் தன்னிடம் இருக்கும் போது பாடல் பாடி செல்வம் பெற்ற புலவர்களுக்கு, தான் வறுமையுற்ற காலத்தினும் புலவர்களைக்காத்த குமணனின் பெருமையை

“மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்

தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே

வாள்தந் தனனே, தலை எனக்கு ஈயத்

தன்னிற் சிறந்தது பிறிது ஒன்று இன்மையின்”

என்னும் பாடலடி வழி அறியலாம். அதேபோல் மன்னனும் தமிழ்ப் புலவர்களால் பாடப்பெறுவதையேத் தனக்குரியத் தகுதியாகக் கருதினான். புலவர் நாவிற்கு மதிப்பிருந்தக் காரணத்தாலேயேப் புலவர்கள் தங்களைப் பெருமையாக எண்ணிக் கொண்டதுண்டு. இத்தகையப் புலவர்கள் அரண்மனையில் சென்றுப் பாடுவது மட்டுமின்றி, பகைநாட்டிடத்தேப் பாசறை அமைத்துத் தங்கியிருந்த மன்னனிடமும் சென்று பாடி பரிசில்கள் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது (Avvai Duraisamy pillai, 2010).

## முடிவுரை

மனிதர் வாழ்ந்த விதத்தை உணர்த்தும் இலக்கியம், வாழவேண்டிய நெறியையும் காட்டவல்லது. புறநானூற்றில் பதிவு செய்யப்பட்டவை வெறும் போர்க்களச் செய்திகள் மட்டும் அல்ல. புறச்சிந்தனையில், அறச்சிந்தனையின் ஆணிவேர் செறிந்திருக்கக் காணலாம். பேரிலக்கியமாக் கருதப்படும் புறத்தில் வாழ்வியல் சிந்தனைகள் அறநெறிக்கு அடிப்படையானவையாக அமைகின்றன. அதாவது, சமுதாயம் என்பது தனி மனிதர்கள் சேர்ந்த கூட்டமைப்பாகும். தனிமனிதர்கள் செய்யும் அறங்கள் சமுதாய மேம்பாட்டை உருவாக்குகின்றன. சமுதாயத்தில் மக்களால் கடைப்பிடிக்கப்படும் அறங்கள் சமுதாய அறங்களாகும். தனிமனித அறத்தை அகப்பொருளிலும், சமுதாய அறத்தை புறப்பொருளிலும் காணமுடிகிறது. பண்டைத்தமிழர்கள் வீர உணர்வுடன், அறவுணர்வும் உடையவர்களாகத் திகழ்ந்துள்ளனர். மொத்தத்தில் புறநானூறு சங்கத்தமிழர்களின் வீரவாழ்க்கையினை எடுத்தியம்பும் வரலாற்றுக் கருவூலமாகத் திகழ்கின்றது என்பதை உணரமுடிகின்றது.

## References

Avvai Duraisamy pillai, S. (2010) Purananooru Moolam Uraiyum, Poompuhar Pathippagam, Chennai, India.

Chidambaranar Samy. (2008) Ettuthogaiyum tamilar panpadum, Arivu publications, Chennai, India.

Kathir Mahadevan, (2003) Pathupattu, Koviliyur Madalayam, Koviliyur, India.

Venkatasamy Nattar, N.Mu. (1994), Silapathikaram Moolamum Uraiyum, Gowra Agency, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License